**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**O.S.No: 96/2019** **தேதி: 01.09.2025**

**பி.வா.சா. 1 – அய்யாவு**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

எனது மனைவி இந்திராவிற்காக நான் ஆஜராகி சாட்சயிம் அளிப்பதற்கு பவர் பத்திரம் ஏதும் கொடுத்தார்களா என்றால் இல்லை. எனது மனைவிக்கு மூட்டு வலி காரணமாக நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றும், அதன் காரணமாக நான் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எனது மனைவியின் இயலாமைக்கு நான் ஏதும் மருத்துவச்சான்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேனா என்றால் இல்லை. நிரூபண வாக்குமூலம் நான் சொன்ன விவரங்களின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது. வாதி தாக்கல் செய்த வழக்கின் விவரத்தை நீதிமனறத்தின் மூலம் தெரிந்து கொண்டேன். இந்த வழக்கின் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரையை எனது மனைவி தான் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை எனது மனைவிக்கு எழுதிக் கொடுத்தவர்கள் ஆறு நபர்கள் என்றால் சரிதான். மேற்படி 6 நபர்களில் முதல் நபர் எனது தகப்பனார் பால்ராஜ் என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயரில் உள்ள நிலம் உள்ளிட்டவை சேர்த்து தான் பி.வா.சா.ஆ.1–ல் கண்டுள்ள கிரையப்பத்திரம் மூலம் கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரிதான். பத்திரப் பதிவு அலுவலகங்களில் கிரையம் மற்றும் சொத்துக்கள் தொடர்பான பத்திர பதிவுகள் நடப்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். என் மனைவி இறந்து போன 1–ம் வாதியிடம் வாங்கிய கடன் தொடர்பாக 02.05.2019–ம் தேதியில் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் நான் வழக்கறிஞர் அறிவிப்பை வாங்கவில்லை, அதனால் பதில் அனுப்பவில்லை. என் மனைவி வழக்கறிஞர் அறிவிப்பை வாங்கியுள்ளார்

என்றும், நான் வழக்கிற்காக வாங்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் மனைவி இறந்து போன 1–ம் வாதியிடம் வாங்கிய ஈடு கடன் பத்திரத்தில் நான் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் வா.சா.ஆ.1 ஈடு கடன் பத்திரத்தில் நான் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன் என்று சொல்லிவிட்டு, தற்போது ஞாபகம் இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஈடு கடன் பத்திரத்தில் உள்ள சொத்துக்களின் அபிவிருத்திக்காகத் தான் எனது மனைவி இறந்து போன 1வது வாதியிடம் கடன் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. வாதியை மோசடி செய்ய வேண்டும் என்ற நோக்கத்திற்காக தற்போது பின்னிட்டு கடன் வாங்கவில்லை என்று சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிராதில் கண்ட சொத்து தாட்கோ மானியத்தின் மூலம் வாங்கிய சொத்து என்றும், அதை அடமானம் வைக்கவோ, விற்பனை செய்யவோ உரிமை இல்லை என்றும், அதனால் அதை ரத்து செய்ய நடவடிக்கை ஏதும் எடுத்தேனா என்றால் நான் தனியாக வழக்கு ஏதும் போடவில்லை. வா.சா.ஆ.1 வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் பணம் பெறுவதாக கூறி 1ம் வாதியின் கணவரால் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். அதில், எப்பொழுது பணம் வரும் என்பது பற்றி நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியாக ஏற்பட்டுத்தினார் என்று நான் காவல்துறையில் புகார் ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் பணம் பெறுவதற்காக மோசடியாக ஏற்பட்டுத்தப்பட்டது என்றும், அதை ரத்து செய்ய வேண்டும் என்றும் பத்திரபதிவு அலுவலகத்தில் நான் மனு ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் உள்ள தொகை ரூ.21,780/– என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் கிரையச் சொத்தின் மார்க்கெட் மதிப்பு ரூ.29,391/– என உள்ளது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் படித்துப் பார்த்து தான் கையெழுத்து

செய்தேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1–ல் உள்ள சொத்துக்களை மானியம் மூலம் வாங்கியதாக சொல்லியுள்ளேன், அதில் அரசு தரப்பு மானியம் எவ்வளவு, கடன் எவ்வளவு என்று காட்டக்கூடிய ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது வரை நான் அரசிற்கு எவ்வளவு கடன் தொகை திருப்பி செலுத்தியுள்ளேன் என்பதற்கான ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.1 மற்றும் பிராதில் உள்ள சொத்துக்கள் என்னுடைய (பிரதிவாதி) அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1–ல் கண்ட சொத்துக்களின் பேரில் வா.சா.ஆ.1 ஆவணம் 1–ம் வாதிக்கு எழுதிக் கொடுத்து அதன் அடிப்படையில் இறந்து போன 1–ம் வாதியிடம் பிரதிவாதி பெற்ற கடனுக்குரிய அசலையும், வட்டியையும் பிரதிவாதி திருப்பி செலுத்த கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 எழுதப்பட்டதில் எந்தவித சட்ட விதி மீறலும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கிற்காக 1–ம் வாதியிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 பத்திரம் எழுதப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேல் ஆனதால் அதில் கண்ட சொத்துக்களை பொறுத்து 1–ம் வாதிக்கு நாங்கள் தர வேண்டி கடனுக்காக வழக்கிடுவதற்கு வாதிகளுக்கு உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.